623

45

கும்பகோணம் விவசாய சங்கத்தின் மாஸாந்திரப் பத்திரிகை.

வாலியம் 13] 1919-ளு ஏப்ரல்மீ [நெ. 4.

MONTHLY JOURNAL OF 8 PAGES

EDITED BY

Mr. R. Srinivasa Iyengar B. A., and Mr. A. Subramania Iyer, B. A.

Annual Subscription is One Rupee. Post Free.

சர்க்கார் பருத்தி.

இது நயமான கரிசல் நிலங்களில் சற்று மழை மட்டமாயிருந்தால் புஞ்சைப்பயிராய் நன்றாய்ப் பயிராகக்கூடிய ஒரு தினுசு நாட்டுப்பருத்தி. இதைச்சற்று வளர்ந்து பெரிய தழை விட்டுக்கொண்டு இலைகள் அடர்ந்த செடியான அந்நியதேசத்து கம்போடியா என்று எண்ணிவிடக் கூடாது. கம்போடியா நீர்பாய்ச்சக்கூடிய செவ்வையாய் உரமிட்டிருக்கும் தோட்டக்கால் நிலங்களில்தான் நன்றாய் உண்டாய்த் தகுந்த மாசூலைத்தரும்.

இந்த சர்க்கார் பருத்தியில் இரண்டு தினுசுகள் இருக்கின்றன. அதில் ஒன்று ஹகரி என்னுமிடத்திலிருக்கும் சர்க்கார் பண்ணையில் முதலில் உற்பத்தியானது. அது பல்லாரியிலும் வருஷத்தில் 20 அங்குலம் மழைபெய்யும் கர்நூல் ஜில்லாவில் எர்ரமலைக்கு மேற்கேயுள்ள பிரதேசத்திலும் உள்ள கரிசல் நிலங்களுக்கும் உதவும். மற்றொன்று நந்தியால் சர்க்கார் பண்ணையில் உண்டானது. அது வருஷம் 30 அங்குலம் மழைபெய்யும் எர்ரமலைக்கும் நல்லமலைக்கும் இடையிலுள்ள கர்நூல் ஜில்லா கரிசல் நிலங்களுக்கு உதவும்.

இவ்விரண்டு பருத்தி தினுசுகளும் ஒரேவிதமாய்த்தான் உண்டானது. அதெப்படியென்றால் ஹகரியில் உள்ளூர்ப் பருத்தியைக்கொண்டுவந்து மற்றெதுடனும் கலக்காமல் அலாதியாய் ஒரு புஞ்சையில் விதைத்துப் பயிர் செய்தார்கள். அந்தப் பயிரில் நல்ல செடிகளாய்ப் பார்த்து அவைகளின் பருத்தியை தனித்தனியாக் கூடியவரையில் ஒன்றோடொன்று கலந்து போகாமல் பத்திரமாய் வைத்திருந்து அந்த விதைகளை தனித் தனியாய் சிறு சிறு துண்டு நிலங்களில் வைத்துப் பயிரிடுவார்கள். அதிலிருந்து கிடைத்தவிதைகளை எடுத்து அதிக விஸ்தீரணமுள்ள நிலங்களில் பயிரிட்டு அவைகளின் மாசூலையெடுத்து ஒன்றுக்கொன்றுள்ள தாராதம்மியத்தைச் சரியாய் ஒத்துப்பார்த்த நயமானதென்று கண்டதை வைத்துக்கொண்டு மட்டமானதை தள்ளிவிட்டார்கள் இந்த நயமானவைகளை அந்த வருஷத்திலிருந்த நல்ல மழை முதலிய சதகத்தினால் ஏற்பட்ட நல்ல குணமா, அல்லது அது நிலைத்திருக்குமா என்று திட்டமாய் அறிய மறுபடி சில வருஷம் தனித்தனியாய் விதைத்து அதற்குள்ள வித்தியாசத்தையும், அவைகளுக்கும் ஊரில் விளையும்பருத்திக்கும் உள்ள

தாரதம்மியத்தையும் பார்த்தார்கள். மறுபடி அவையெல்லாம் நூல் நூற்பதற்கும் சிறந்தவைகளா என்று சோதித்து நூற்பதற்கு மிகச் சிறந்ததாகும், அதிக மாசூல் கொடுக்கக்கூடியதும், நீண்ட இழையுள்ள வெண்மையானது பஞ்சு உள்ளதும், பஞ்சு அதிகம் கட்டுகிறதுமானவை கடைசியில் பொருக்கி எடுத்துக்கொண்டார்கள். இவ்விதமாய்க் கிடைத்த விதையைத்தான் "சாகார் பருத்தி" என்று வெளியில் விற்பனை செய்தார்கள். நாட்டுப்பருத்தியிருந்து பொருக்கி எடுத்திருப்பதால் அதைப்போலவே இந்நாட்டு சீதோஷ்ணம், பூவளம் முதலியதெல்லாம் இதற்கு ஒத்துக்கொள்ளுவதோடு, அதின் சிலவிசேஷ குணத்திற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தால் அதிலும் இது சிறந்த மாசூலைத் தரும் என்பது இதனால் தெரிகிறது.

கர்நூல் ஜில்லாவில் "சர்க்கார் பருத்தி" என்று சொல்லப்பட்டு விற்பனையாகிற பருத்தி, உள்ளூர் பருத்திபோன்று அவ்வளவு நல்லமாசூலைத் தருவதுடன், அதைவிட அதிகமான பஞ்சு கட்டுமானமுள்ளதாயிருக்கிறது. அதாவது முன் நூற்றுக்கு 25 பங்கு பஞ்சு கொடுத்ததினின்று நூற்றுக்கு 30 பங்கு பஞ்சு கட்டுமானமுள்ளதாயிருக்கிறது. 1917-18 வருஷத்தின் இவ்விதை 60,000 ராத்தல் விற்பனையாயிருக்கிறது.

பல்லாரியிலும் இதைப்போன்ற பருத்தி உள்ளூர் பருத்தி அவ்வளவு மாசூல் கொடுக்கக்கூடியதாயும் ஆனால் கட்டுமானம் ஜாஸ்தியாயுள்ளதாயும் (நூற்றுக்கு 25 லிருந்து 30 பங்கு) ஆன பருத்தியை விளைவித்திருக்கிறார்கள்.

இந்த விதையை முதல் முதல் பயிரிட்டுப்பார்க்க எண்ணமுள்ள குடியானவர்கள் சர்க்கார் டிபோக்களிலிருந்தாவது சாக்கார் பண்ணையிலிருந்தாவது வாங்க ஏற்பாடு செய்துகொள்ளவேண்டியது. பின் அதை அலாதியாய் வைத்திருந்து வேறொன்றோடும் கலந்துவிடாமல் ஒரு நிலத்தில் விதைக்கவேண்டும், அவரவர்கள் ஊர்பருத்தியைவிட இது சிலாக்கியமென்று கண்டு அதிக விஸ்தீர்ணத்தில் பயிர்செய்யவேண்டுமென்றிருந்தால் திரும்பவும் சர்க்கார் டிப்போக்களிலிருந்து விதைவாங்க ஏற்பாடுசெய்யவேண்டும். அல்லது தாங்கள் பயிரிட்டிருக்கும் நிலத்தின் மத்தியில் ஒருபாகத்தைப்பிரித்துக்கொண்டு அதில் விளைகிறபருத்தியை துண்டாக எடுத்துவைத்திருந்து அரைத்து அந்த விதையைத் தங்களுக்கு மற்ற நிலங்களில் விளைந்துவரும் வேறு பருத்திகளின் விதையோடு கலந்துபோகாமல் பத்திரமாய் வைத்துக்கொள்ளவேண்டியது. இது போலவே தங்களுக்கு பருத்திபயிரிடும் எல்லா விஸ்தீரணத்திலும் இதையே பயிரிடுவோரும் தங்கள் நிலங்களில் மத்தியில் உள்ள ஒரு பாகத்திலிருந்து பருத்தியெடுத்து அரைத்து கலவனில்லாமல் வைத்துக் கொள்ளவேண்டியது. தவறினால் பிரதி வருஷம் ஒரு கவர்ன்மெண்டு டிப்போவிலிருந்து விதை வாங்கிக்கொள்ளவேண்டும்.

கம்போடியாவானாலும் சரி, சர்க்கார் பருத்தியானாலும் சரி, எந்தப் பருத்திக்கும் இந்தப்படிசெய்வது நல்லது. சருகு குப்பை முதலியன கலந்திருந்தால் விலைகுறைந்துவிடும். தென் ஜில்லாக்களில் பருத்தி விளைகிற இடங்களிலும், கர்நூலில் ஒரு தாலுகாவிலும் காலை நேரத்தில் பருத்தி பொறுக்க ஆரம்பித்து வெய்யில் அதிகக் கடுமையாகிறபோது

நிறத்தில் விளைகிறதினால் பருத்தி தூசு சருகு இல்லாமல் சுத்தமாயிருக்கிறது. அதனால் வெய்யிலில் சருகு முதலியது உலர்ந்து பொடிந்து போகக்கூடிய சமயத்தில் பருத்தி பொறுக்க ஆரம்பித்து கடுவெய்யிலில் இல்லாமல் பருத்தி எடுத்து அந்த சருகு செத்தையெல்லாம் அநேகமாய் கலந்து பொறுக்கப்படும் வழக்கமுள்ள மற்ற வட ஜில்லாக்களிலிருந்து வருகிற பருத்தியைக்காட்டிலும் அதிக விலைக்கு இந்த நல்ல சமயத்தில் ஜாக்கிரதையாய்ப் பொறுக்கி சேகரிக்கப்பட்ட பருத்தி விற்கப்படுகிறது. பருத்தியைக் கலவனில்லாமல் விளைவித்தல், சிருகு செத்தையில்லாமல் பருத்தியைப் பொறுக்கிவைத்துக்கொள்ளுதல் என்னும் இரண்டு விஷயங்களைக் கவனித்தால் இந்த ஜில்லாப் பருத்திக்கும் "பருத்திமார்க்கெட்டில்" நல்ல பேரும் நல்ல விலையும் கிடைக்கும் என்று சம்சாரிகளுக்குத் தெரியவரும்.

பல்லாரி ஜில்லாவில் நிலமுள்ள குடியானவர்களுக்கு இந்த விதை வேண்டுமானால் ஹகரி சர்க்கார் விவசாயபண்ணை மானேஜருக்கும் கர்நூல் ஜில்லாவில் மேலே சொன்னபாகத்தில் நிலமுள்ளவர்கள் நந்தியால் சர்க்கார் விவசாயபண்ணை மானேஜருக்கும் மனுச்செய்து கொள்ளவேண்டியது.

இந்த தினுசு பருத்தியின் விலை, நந்தியாலில் ஒரு ரூபாய்க்கு 25-ராத்தலும், ஹகரியில் 26-ராத்தலும் ஆக இருக்கிறது.

ஜி. ஆர். ஹில்சன்,
விவசாய டிப்டி டைரெக்டர்,
I, II, III சர்க்கில்ஸ், பெல்லாரி.

"விவசாயிகளின் கூட்டுறவு"

பல பிள்ளைகளை உடைத்தாயிருந்த கிழவனொருவன் இறக்குந்தருணத்தில் தன் பிள்ளைகளைக் கூப்பிட்டு ஒரு சிறு விறகு கட்டு கொண்டுவரச்சொல்லி அந்தக்கட்டை தன் பிள்ளைகளிடம் கொடுத்து அதை முறிக்கும்படி சொன்னதாயும், அவர்கள் அது ஒரு கட்டாக கட்டியிருந்தபோது முறிக்கமுடியாமற் போனதாயும், கட்டைப் பிரித்து ஒவ்வொரு குச்சியையும் தனித்தனியாய் எடுத்து முறிக்கும்படி சொன்னபோது அவர்கள் சுலபமாய் முறித்ததாயும், அதன்பின் அந்தக் கிழவன் இதனால் கற்றுக்கொள்ளக்கிடந்த கற்பனையை விளக்கி "ஒற்றுமை" அல்லது "கூட்டுறவு" என்பதின் பெருமையையும் வலிமையையும் எடுத்துக்காட்டினதாயும் சொல்லப்படுகிற புராதனகதையை எல்லோரும் அறிவார்கள்.

நாகரீகம் பரவியிருக்கிற தேசங்களிலெல்லாம் கூட்டுறவும் இப்போது பரவியிருக்கிறது. அது அநேக வடிவுகொண்டு வெளித்தோன்றியிருந்தபோதிலும், அவைகளெல்லாம் மேற்சொன்ன கிழவன் செய்து காட்டிய உண்மையைத்தான் ஆதாரமாகக்கொண்டிருக்கின்றன. ஒன்றுகூடாமல் தனித்தனியாய் வேலைசெய்யும் மனிதர்களைவிட ஒன்றுகூடி வேலைசெய்யும் அதே எண்ணிக்கையுடைய மனிதர்கள் பலசாலிகளாவார்கள்.

சென்னை ராஜதானியில் கூட்டுறவு சாதாரணமாய் அனுசரிக்கப்படும் நாணயச் சங்கங்களின் ரூபமாய் வெளித்தோன்றியிருக்கிறது. இந்த நாணயச் சங்கங்கள் ராஜதானிமுழுவதும் பரவியிருக்கின்றன. ஜனங்களுள் பெரும்பாலருக்கு ஒருசமயம் அல்லது மற்றொரு சமயத்தில் கடன்வாங்கும்படி அவசியம் உண்டாகிறது. கல்யாணம் செய்ய வேண்டிய காரணமாவது, மாசூல் பலன் கிட்டாத நிமித்தமாவது, கிணறுவெட்டுதல் அல்லது நிலத்தை சீர்திருத்துதல் முதலிய படிப்படியாய் பிரதி பலன் வரக்கூடிய காரியத்திற்கு முதற்பணம் வைக்கவேண்டிய அவசியமாவது, உண்டாகிறது. ஆகவே நமது குடியானவர்களில் அநேகர் கடனுக்கு ஆளாயிருக்கிறார்கள். கிராமாந்தரங்களிலிருக்கும் லேவாதேவிசகாரர்கள் கொடுக்கும் கடன் நிபந்தனைகளோ மிகக் கடினமானவை. ஆனதால் குடியானவரின் கடன் பளுவு அவனுக்கு நியாயமாய் இருக்கவேண்டிய அளவைப்பார்க்கிலும் பலசமயங்களில் அதிகமாயிருக்கிறது. சிலசமயங்களில் அவன் நிலமை அவன் ஈடேறுவான் என்ற நம்பிக்கைக்கும் பெரும்பாலும் இடந்தருவதில்லை. கொடுத்த பணம் திரும்பிவரவேண்டும் என்னும நோக்கத்தோடு சாவகார் கடன் கொடுப்பதில்லை பணம் வாங்கினவன் கடனில் மூழ்கி அடமான நிலம் தன் கைக்கு வரும் விதமாக கடன் கணக்கு முடிவு கட்டப்படவேண்டுமென்ற ஆசையோடு சாவகாரர்கள் கடன் கொடுக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்த விஷயம்.

இந்தக் காரணங்களைப்பற்றித்தான் நாணயத்தை உண்டுபண்ண கூட்டுறவின் கோட்பாட்டைக் கைக்கொண்டது. மற்ற விஷயங்களைப் போலவே, நாணயத்தை உண்டுபண்ணும் விஷயத்திலும் பத்துபேர் ஒன்றுகூடிச் செய்யும் காரியம் அவர்களே தனித்தனி பிரிந்துசெய்யும் காரியத்தைப்பார்க்கிலும் திறமானதாகக் காணப்படுகிறதென்பது ஆச்சரியமல்ல பத்துபேர் ஒரு சங்கமாய்ச்சேர்ந்து சங்கத்தின் கடன்களுக்கு சேர்ந்த பிரதி மனிதனும் ஜவாபு ஆகும்பக்ஷத்தில், அந்த ஜவாப்பைப்பற்றி சங்கத்திற்கு உண்டாகும் நாணயம் மிகவும் அதிகமாயிருக்கும். சங்கத்தில் சேர்ந்த மனிதர்களுக்கு தனித்தனி கிடைக்கக்கூடிய நாணயத்தைப்பார்க்கிலும் சங்கத்திற்கு அதிக நாணயம் உண்டாகி பெருந்தொகை கடன்வாங்க சாத்தியமாகும். ஆகையினாலே கடன்கொடுக்கும் பெரிய பாங்குகள் இப்படிப்பட்ட சங்கங்களுக்கு, அவைகளில் தனித்தனி மெம்பர்களுக்கு எவரேனும் கடன்கொடுக்கும் நிபந்தனைகளை விட மிகவும் சுலபமான நிபந்தனைகளின்பேரிலும் சுலபமான வட்டியின்பேரிலும் கடன் கொடுக்கின்றன. இப்படி சுலபமான வட்டிக்கு வாங்கும் சங்கம் தனது மெம்பர்களுக்கு தான்வாங்கின வட்டிவீதத்திற்கு சிறிது அதிகமாய் கடன் கொடுக்கிறது. இப்படி சிறிது அதிகப்படுத்த வேண்டிய அவசியம் என்னவென்றால் தனக்கு நேரும் நியாயமான செலவை பொறுக்கவேண்டியிருப்பதினாலேதான்.

ஒரு ஐக்கிய நாணயச்சங்கம் கொடுக்கும் கடனுக்கு ஒரு சாவகார் கொடுக்கும் கடனுக்கும் இருக்கும் தாரதம்மியத்தைக் கவனிக்கவேண்டும். கேட்கும் கடன் ஒரு நல்ல காரியத்திற்காக கேட்கப்படுகிறதாவென்றாவது, கடன் நிபந்தனைகள் கடன் வாங்குபவனுக்கு சௌகரியமானவைதானாவென்றாவது சாவகார் கவனிப்பதில்லை. கடனுக்காகக்

காட்டும் ஆதாரம் போதுமானதாவென்று பார்க்கும் விஷயத்தில் மாத்திரம் அவன் கவலையெடுத்துக்கொள்ளுகிறான். தன்னால் எவ்வளவு கிரகிக்கக்கூடுமோ அவ்வளவு அதிகமாய் வட்டிவாங்கிக்கொள்ள விரும்புவான். ஐக்கிய நாணயச்சங்கமோ, அப்படியல்லாமல் எவ்வளவு குறைந்த வட்டிக்குக் கொடுத்தல் சாத்தியமோ அவ்வளவு குறைந்தவட்டிக்கு கடன் கொடுக்கும். மேலும் கடன் நிபந்தனைகளை ஏற்படுத்துவதில் கடன் வாங்கினவனுக்கு கடனைத் திருப்பிக்கொடுப்பதில் எவ்வளவுதூரம் சௌகரியம்செய்ய சாத்தியமோ அவ்வளவுதூரம் செய்து நிபந்தனைகளை வெகு ஜாக்கிரதையாய் ஏற்படுத்தும் கடைசியாக வாஸ்தவத்தில்பலனைக் கொடுக்கக்கூடிய காரியமும் நல்ல காரியமுமல்லாத வேறெந்த காரியத்திற்கும் ஒரு ஐக்கியச் சங்கம் கடன்கொடுக்கமாட்டாது. சங்கத்தின் விருப்பம் எல்லாம் உண்மையாகவே கடன்வாங்கும் மெம்பரின் நிலைமையை தன்னாலியன்ற அளவு முன்னிருந்ததைவிட உயர்த்தி பணமுள்ளவனாகவும் எதை செய்வதற்கும் தன்னுடைய சக்தியையே நம்பியிருப்பவனாகவும் செய்யவேண்டுமென்பது. சாவகாரோவென்றால் அவன் தன்னுடைய லாபத்தை அதிகரித்துக்கொள்ளுவதில் கவனம் செலுத்தவேண்டியவன்.

இப்போது இவ்விராஜதானியில் 1. 907 கிராமச் சங்கங்கள் இருக்கின்றன. அவைகள் தங்கள் மெம்பர்களுக்கு மிகுந்த நன்மைகளைச் செய்திருக்கின்றன. மெம்பர்கள் முன்வருஷங்களில் மீளா வட்டிக்கு வாங்கியிருந்த பழைய கடன்களை நிவர்த்திசெய்ய இந்தசங்கங்கள் உதவி செய்திருக்கின்றன. அப்போதப்போது நேரும் அவசர செலவுக்கு குறுகிற காலத்தவணைகளுக்கு கடன் கொடுப்பதுமல்லாமல், தடுக்கமுடியாத காரியங்களுக்கும், பிரதிபலன் உண்டுபண்ணக்கூடிய மூலதனம் செலவிடவேண்டிய காரியங்களுக்கும், நீண்டகாலத் தவணைகளுக்கும் இந்த சங்கங்கள் கடன்கொடுத்து இப்படிப்பட்ட நியாயமான செலவுகளுக்கு உதவிசெய்கின்றன. இன்னும் இந்த சங்கங்கள் மெம்பர்களுக்கு வேலைசெய்யும் முறைமையையும், வாங்கின கடனை கெடுவுபடி கொடுக்கவேண்டுமென்பதையும், ஒருவர்க்கொருவர் உதவிசெய்துகொள்ள ஆசைப்பட்டு தயாராயிருக்கவேண்டுமென்பதையும், ஒருவன் தனக்கு ஆகவேண்டிய காரியத்திற்கு தன் சக்தியையே நம்பியிருக்கவேண்டிய குணத்தையும், ஒருவன் தன் கௌரவத்துக்குத் தகாத காரியங்களை செய்யக்கூடாதென்பதையும் கற்றுக்கொடுக்கின்றன.

பணலேவாதேவிச் சங்கங்களாகவேயல்லாமல் இதர வழிகளிலும் கூட்டுறவுத் தொழில்செய்ய இச்சங்கங்கள் காலக்கிரமத்தில் அனுபவம் முதிர முதிர தங்கள் மெம்பர்களுக்கு கற்றுக்கொடுக்குமென நம்பப்படுகிறது. உதாரணமாக இச்சங்கங்கள் தங்கள் மெம்பர்கள் உற்பத்தி செய்யும் தானியங்களை ஒன்றுசேர்த்து பெரும் வியாபாரிகளுக்கு மொத்தமாய் விற்பனைசெய்தால் இப்போது அவர்களுக்குக் கிடைக்கும் விலையைப்பார்க்கிலும் நல்ல விலை கிடைக்கக்கூடும். அல்லது மெம்பர்களுக்கு வேண்டிய விதை, எரு, தணி அல்லது இதர சாமான்களை ஒன்றுசேர்ந்து எல்லாருக்குமாக மொத்தமாய் மொத்த விலையின்படி வாங்கி பிரித்துக்கொள்வார்களானால், இப்போது அவர்கள் வாங்கும்

விலையைவிட மிகுந்த குறைந்த விலைக்கு வாங்கக்கூடும். இவைகளைத் தவிர்த்து வேறு வழிகளிலும் இச்சங்கங்கள் தங்கள் மெம்பர்களுக்குப் பலனை உண்டுபண்ணுமென நாம் நம்பலாம்.

இச்சங்கங்களுக்கு வேண்டிய பணம் சென்னையிலும் வெளியில் பல பெரிய நகரங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஸெண்டிரல் பாங்குகளிலிருந்து கொடுக்கப்படுகிறது. இந்த ஸெண்டிரல் பாங்குகளில் கனவான்களேயல்லாமல் இந்த பாங்குகளில் கடன் வாங்கும் சங்கங்களும் ஷேர்கள் எடுத்துக்கொள்ளுகின்றன. இந்த பாங்குகளுக்கு பொது ஜனங்களிடத்திலிருந்து டிபாசிட் மூலமாக பணம் கிடைக்கிறது. அவைகள் சங்கங்களுக்கு சாதாரணமாய் வருஷம் 1 க்கு 100 க்கு ரூபா $7\frac{1}{4}$ வட்டிக்கு கடன் கொடுக்கின்றன. சங்கங்கள் மெம்பர்களுக்கு வருஷம் 1 க்கு 100 க்கு ரூபா $9\frac{3}{4}$ அல்லது மாதம் 1 க்கு ரூபா 1 க்கு $1\frac{1}{2}$ பை வீதம் வட்டிக்குக் கொடுக்கின்றன இந்த இரண்டு வட்டிவீதத்துக்கும் வித்தியாசப்படுகிற தொகையிலிருந்து 100 க்கு $\frac{3}{4}$ வீதப்படி ஏற்படுகிற பணம் சங்கங்களை மேற்பார்வை செய்வதற்காக ஏற்படுத்தியிருக்கும் சூபர்விஷன் பண்டுக்கு சேர்க்கப்படுகிறது. சங்கங்களின் பஞ்சாயத்தார்கள் புஸ்தகங்களை கிரமமாய் எழுதுவதற்கும், மெம்பர்கள் கொடுக்கவேண்டிய பணத்தை வசூல் செய்வதற்கும் உதவி செய்யும் பொருட்டு சங்கங்கள் இந்தபணத்திலிருந்து சூபர்வைஸர்களை நியமித்து சங்கங்கள் தோறும் போகும்படி செய்கின்றன. கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர்களும், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்திரார்களும், ஸெண்டிரல் பாங்குகள், சங்கங்கள் இவைகளின் கணக்குகளை பரிசோதிப்பதற்கும், புத்தி புகட்டுவதற்கும், உதவி செய்வதற்கும் அடிக்கடி பிரயாணம் செய்து அவைகளைச் சுற்றிப்பார்த்துவருகிறார்கள்.

F. R. ஹெம்மிங்வே,
ரிஜிஸ்ட்ரார், கோ-ஆபரேடிவ் ஸொஸைட்டிஸ், மதராஸ்.

சென்னையில் நீலிச்சாயம் செய்யும் விதம்.

(மார்ச்சுமீ 15-வது பக்கத் தொடர்ச்சி.)

தழை ஊரப்போடும் ஜலம் சற்று உஷ்ணமாயிருக்கும் சந்தர்ப்பங்களில் கொஞ்சநேரத்திற்கு ஊரப்போட்டும், ஜலம் ஜில்லென்றிருக்கும் போது சற்று அதிகநேரம் ஊரப்போட்டும், அதாவது தழை ஊரப்போடும் ஜலத்தின் சீதோஷ்ணங்களுக்கு தக்கபடி ஜாஸ்தியாயும் கம்மியாயும் ஊரப்போட்டு பரீக்ஷைகள் நடத்தியபொழுது ஜாஸ்தியளவு உயர்ந்தர நீலிசத்து கிடைத்திருக்கிறது. வட இந்தியாவில் ஜாஸ்தியாய் நீலி உற்பத்திசெய்யும் தொட்டிகள் வைத்திருக்கிறவர்கள் தழை ஊரப்போடும் தொட்டிகளில் உபயோகிக்கும் ஜலம் சற்று உஷ்ணமாயும் அதேமாதிரி உஷ்ணம் எப்போதும் இருக்கும்படிக்கும் உண்டான சாதனங்கள் அமைத்திருக்கிறார்கள். அங்கே செய்யும் நீலிச்சரக்கு சென்னையில் செய்யும் சரக்கைவிட உயர்ந்த தரமாயிருக்கிறது. அதற்கு நல்ல விலையும் கிடைக்கிறது. தழையை ஜாஸ்தி நேரம் தொட்டியில் ஊரவிடுவதால் ஜாஸ்தியளவு மருந்து கிடைத்தாலும் அம்மருந்து பூராவும்

சுத்த நீலிச்சரக்கில்லாமல் சாயசத்தில்லா மஃடு பதார்த்தங்களுடன் கலந்திருக்கிறது. ஜாஸ்தி நேரம் தழை தொட்டியில் ஊருவதால் சுத்தச் சாயச்சரக்கு எப்படிகெட்டுக் குறைந்துபோகிறதோ அதே பிரகாரம் ஜாஸ்தி நேரம் ஊரப்போடுவதால் மருந்து ஜாஸ்தியிடையகப்பட்டாலும் அதிலிருக்கும் சுத்தச் சாயச் சரக்குக் கெட்டுவிடுகிறது. தழை ஊரும் தொட்டியில் உபயோகிக்கும் தண்ணீர் 90° Farenheit உள்ள காங்கையாயிருந்தால் 12 மணிநேரம் தழை ஊறினால் அதிலிருக்கும் சாயச் சத்துப் பூராவும் ஊறிதொட்டியில் கக்கிபோக போதுமான காலம் என்று செய்த பரீக்ஷைகளில் அனுபோகத்திற்கு வந்திருக்கிறது. மேற்சொன்னதைவிட தண்ணீர் குளிர்ச்சியாயிருந்தால் 90° க்கு குறைச்சலாயுள்ள ஒவ்வொருடிகிரிக்கும் கால் மணி நேரம் ஜாஸ்தி தழை ஊரவேண்டும் 84° டிகிரி அளவு தண்ணீருக்கு சூடியிருந்தால் தழை 15மணி நேரம் மாத்திரம்தான் ஊரவேண்டும். மேற்சொல்லியபடி தழை ஊரியபின் உடனே அடிக்கும் தொட்டிக்குத்திறந்துவிட்டு தாமதமின்றி அடிக்கவேண்டும். ஏனென்றால் சாயச்சரக்கு தழை அறுத்தமுதல் கொண்டு அண்டாவில் காய்ச்சும்வரை புளிப்பேறி கெட்டுப்போகும் குணம் அதற்குண்டு. ஆகையால் அடிக்கும் தொட்டியில் மேல் தொட்டியிலிருந்து சாயத் தண்ணீரை இறக்கின உடனே அதையடித்து மருந்து தொட்டியில் படியவிட்டு, படிந்த உடனே தாமதம் செய்யாமல் வழித்து அண்டாவில் காய்ச்சவேண்டும். தற்காலம் நீலிச் சாயம் செகிறவர்கள் மேல்சொன்னபடி செய்யாமல் அடிக்கும் தொட்டியில்மருந்து படிந்தபின் அதை வெகுநேரம் தாமதம் செய்தும் சில வேளைகளில் மறுநாள்வரைவைத்தும் அண்டாவில் காய்ச்சுகிறார்கள். இது தப்பான காரியம். இப்படி செய்வதால் அதிக நஷ்டம் உண்டாகிறது. நீலிச்சாயத்துக்குண்டான கெட்டுப்போகும் குணத்தைகாய்ச்சுவதால் மாத்திரம்தான் மாற்றக்கூடும். மருந்து காச்ச ஆரம்பம் செய்தபின் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் வைத்திருக்கலாம். ஏனென்றால் காய்ச்சினபின், மருந்து புளிப்பேரிக்கெட்டுப்போகாது. சென்னையில் கிணற்று ஜலத்தை தழை ஊரப்போட உபயோகிக்கிறார்கள். இவைகளில் ஜலம் சாதாரணமாய் சுத்தமாகவேயிருக்கிறது. ஏனென்றால் தொட்டிகளில் வேலை ஆரம்பிக்கு முன் அச்சலத்தை இறைத்து புதுஜலம் கிணறுகளில் ஊரவைக்கிறார்கள். சில கிணறுகளில் எப்போதும் ஜலம் இரைத்துக்கொண்டிருப்பதால் ஜலம் சுத்தமாகவேயிருக்கிறது. ஆனால் சில வேளைகளில் அடிக்கும் தொட்டியில் சாயத் தண்ணீரை அடித்தபின் மருந்து கீழேபிடியாமல் ஜலம் பச்சை ரங்காகவேயிருக்கிறது. இப்படி ஜலம் பச்சைவர்ணமாயிருந்தால் மருந்து கம்மியாய்தான் கிடைக்கும். வட இந்தியாவில் தொட்டிகள் பெரிதாயிருக்கும் சந்தர்ப்பங்களில் தண்ணீர் அடிக்கும் தொட்டியுல் புரச மரத்தின் (பலாசு அல்லது முருக்கம்) கோந்தைக் காச்சி அந்தத் தண்ணீரை அடித்து முடிவாகும் சமயத்தில் ஊத்துவதுண்டு.

தென்னார்க்காட்டு ஜில்லாவில் கொஞ்சம் சுண்ணாம்புத் தண்ணீரை விடுகிறார்கள். இவ்வழக்கம் சரியானதல்ல. நாகமரத்துப்பட்டைத் தண்ணீர் விடுவது, சுண்ணாம்புத் தண்ணீர் விடுவதைவிட சிலாக்கியம்.

எத்தருணத்தில் அடிக்கும் தொட்டியில் தண்ணீரை அடித்து நிறுத்த வேண்டுமென்ற கணக்கு எல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. ஆனால் தற்காலம் இந்த வேலையைச் சற்றுமெதுவாயும் தாமதமாயும் செய்கிறார்கள். மருந்து செய்கிறவர்கள் நல்ல சுத்தமான மேல்தர சரக்கு செய்ய வேண்டுமென்று எண்ணமிருந்தால் இவ்வேலையை மிகச் சுருசுருப்பாயும் ஊக்கத்துடனும் செய்தும் முடிக்கவேண்டும் ஊக்கமாயும் ஜல்தி செய்தால் அடிக்கும் நேரத்தின் அளவை சற்று குறைக்கலாம்.

மேல் சொன்ன யோசனைகளை கையாடினால் கொஞ்சவேலையை இராத்திரியில் செய்யவேண்டியதாயிருக்கும். இராத்திரியில் வேலை செய்தவர்களுக்கு சற்று ஜாஸ்திகூலி கொடுத்து வேலையை தாமதமன்றி செய்தால் அதில் உற்பத்தியாகும் உயர்ந்த தர சரக்கு விற்கும் ஜாஸ்தி விலை இராத்திரி வேலை செய்த கூலியாட்களுக்கு செலவானதைவிட ஜாஸ்தி விலையைக்கொடுக்கும்.

F. மார்ஸ்டன்,
நீலிச்சாயம் ஆபீஸர்,
கோயம்புத்தூர்.

நோயினால் பீடிக்கப்பட்ட செடிகளை சோதனைசெய்யப்படுவதற்காக கோயம்புத்தூரிலிருக்கும் கவர்ண்மெண்டு (Mycologist) மைகாலஜிஸ்ட் அவர்களுக்கு தபால் மார்க்கம் அனுப்புவதற்கு கவனிக்கவேண்டிய விதிகள்.

சோதனைக்காக அனுப்பப்படுகிற செடிகளை நோயின் எல்லா நிலைமையையும் காட்டக்கூடியதாயிருக்கும்படி தெரிந்தெடுக்கப்பட வேண்டும். அதாவது நோய்கண்டவுடன் இருக்கப்பட்ட ஸ்திதியையும், பூராவாக நோய் தாக்கப்பட்ட பிறகும், பயிரின் கடைசி நிலைமையையும் காட்டக்கூடியதாயிருக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட செடிகளை, மை ஒற்றும் காகிதங்களுக்கு ஊடே வைத்து, பளுவேற்றி ஒவ்வொரு நாளும் ஈரமான காகிதங்களை எடுத்துவிட்டு அவைகளுக்கு பதிலாக காய்ந்த கடிதங்களை மாற்றி, இவ்விதமாய் 3 அல்லது 4 நாள் செய்யவேண்டும். பிறகு அவைகளை காய்ந்த மை ஒற்றும் காகிதங்களில் வைத்து, காகித அட்டைகளின் ஊடே வைத்தாவது, பெட்டியிலாவது கட்டி அனுப்பலாம். பெரிய செடிகளை வெயிலில் காயவைத்து கோணிச்சாக்கில் சுற்றிவிடலாம். சோதனைக்காக அனுப்பவேண்டிய செடிகளை ஈரமாயிருக்கும்போது (காயவைக்காமல்) ஒருபோதும் கட்டி அனுப்பக்கூடாது. ஏனென்றால் அப்படி அனுப்புவதில் செடிகளின்மேல் பூஞ்சணம் படர்ந்துவிடும். அப்போது செடிகளை பரீக்ஷைசெய்ய இடஞ்சலாயிருக்கும். சோதனைக்காக அனுப்பும செடிகளை, மெதிலேடெட் ஸ்பிரிட் (Methylated spirit) என்னும் சாராயத்திலும், ஆரக் (Arrack) சாராயத்திலும், போட்டு அனுப்பலாம்.

Printed at the Alexandra Press, Kumbakonam and Published by Mr. Rao Sahib C. R. Lakshmivaraha Ayyangar, B.A., B.L., & Mr. R. Srinivasa Ayyangar, B. A., for The Agricultural Association, No. 5, Cutchery Road Kumbakonam.